சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 10/2021

பெயர் திரு. தவளகிரி த/பெ. கோவிந்தன் நாள்.06.01.2026

**<u>வ.வி. 2/2025ல் பகரப்பட்ட உத்தரவுப் படி பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வாதிகள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்துக்கள் ஏற்கனவே எல்லப்பனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எல்லப்பனுக்கு ராமதாஸ், ஏழுமலை, பாலகிருஷ்ணன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். எல்லப்பன் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். எல்லப்பன் இறந்தபின்பு அவருடைய நான்கு குமாரர்கள் எல்லப்பனின் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வாதி புல எண்.287/21பியிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 40 சென்ட் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 40 சென்ட் பாலகிருஷ்ணன் பாகத்திற்கு வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட 2 ஏக்கர் 40 சென்ட்டில் 69 சென்டை பாலகிருஷ்ணன் எனக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. நான் பாலகிருஷ்ணனிடம் இருந்து 1ஏக்கர் 15 சென்ட் கிரயம் பெற்றேன். அந்த 1 ஏக்கர் 15 சென்ட் எந்தெந்த புல எண்களில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

2) பாலகிருஷ்ணனுக்கு வழக்கு புல எண்ணில் உள்ள 69 சென்ட் மட்டும் தான் கிரயம் கொடுத்தார் என்றாலும், மீதமுள்ள விஸ்தீரணம் பாலகிருஷ்ணனுக்கு உரிமையாது அல்ல என்றாலும் சரியல்ல. பாலகிருஷ்ணன் எப்பொழுது இறந்தார்

என்று எனக்கு தெரியாது. தற்பொழுது அவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். வாதிகள் பாலகிருஷ்ணனின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். 12.02.1998 தேதியில் நான் குப்புசாமி, பொன்னன், செங்கேணி மற்றும் ஏகாம்பரம் ஆகியோரிடமிருந்து சொத்துக்களை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்கண்ட கிரய ஆவணத்தில் வழக்கு புல எண்ணில் 50 சென்ட்டை சேர்த்து எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. அந்த 50 சென்ட் நிலம் வாதிகளுக்கு மட்டுமமே உரிமையானது என்றாலும், மேற்கண்ட கிரய ஆவணம் மூலம் நான் கிரயம் வாங்கியது தவறு என்றாலும் சரியல்ல. என்னுடைய கிரய ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருவாதாக கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை வழக்கு சொத்திற்கான பட்டா எல்லப்பன் பெயரில் வருகிறது என்று சொன்னால் சரிதான்.

3) 12.02.1998 தேதியிட்ட கிரய ஆவணம் மூலம் வழக்குச் சொத்தை நான் கிரயம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. உரிமையில்லாத நபரிடம் இருந்து நான் வழக்குச் சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை வாதிகள்தான் இன்று வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் நான் பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.